DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -378/2025

Prosecution PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முத்துவேல் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 11.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1- A5 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது மெலட்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2020ம் தேதி தஞ்சாவூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, காவல் ஆய்வாளர் கழனியப்பன் அவர்களுடன், நானும், உதவி ஆய்வாளர் பார்த்தசாரதி, இரண்டாம்நிலை காவலர் சிற்றரசு ஆகியோருடன் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் ரோந்து சென்றபோது, ஆய்வாளருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் படி பனங்காடு மேட்டுத்தெருவில் 8.00 மணிக்கு தகவலாளி சொன்ன இடத்தில் கண்காணித்தபோது, தகவலாளி கூறியதைப்போல் 6 நபர்கள் பயங்கர ஆயுதங்களுடன் உட்கார்ந்திருந்தவர்களை கண்காணிக்க அவர்கள் நாமல்லாம் எங்காவது கொள்ளயடித்து அந்த பணத்தை வைத்து பெரியாளாக வேண்டும் என்று திட்டம் தீட்டிக்கொண்டிருந்தவர்களை சுற்றிவளைத்து பிடிக்க அவர் தப்பி ஓடிவிட்டார். அவர்களில் கம்பி-1, அருவாள்-1, கட்டை-1 ஆகிய கொடிய ஆயுதங்களை வைத்திருந்தனர். அவர்கள் பெயர் விலாசம் விசாரிக்க ஒன்றாவது நபர் விக்னேஷ்வரன், (எ) எஸ்கால் விக்கி மற்றவர்கள் திவாகர், கட்டை(எ) பிரவின், நந்து (எ) நந்தகுமார், செல்லப்பா என்று பெயர் விலாசம் கூறினார். தப்பி ஓடிய நபர் குறித்து விசாரிக்க அவர் மொட்டை (எ) தமிழரசன் என்று தெரியவந்தது. ஆய்வாளர் அவர்களை 8.00 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து, அதில் 1வது எதிரி விக்னேஷ்வரன் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் என் முன்பாகவும்,

இரண்டாம்நிலைகாவலர் சிற்றரசு முன்பாகவும் பதிவு செய்தார். எதிரிகள் வைத்திருந்த 4-கட்டை, 1-அருவாள் மற்றும் இரும்பு குழாய்-1 ஆகியவற்றை என் முன்பாகவும், சிற்றரசு முன்பாகவும் ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ.**1.** கட்டை 4 எண்ணிக்கை சா.பொ.**1.** அருவாள் சா.பொ.**2**. இரும்பு குழாய் சா.பொ.**3.** பின்னர் எதிரிகள் மற்றும் தடயத்துடன் 10.00 மணிக்கு நிலையம் வந்து ஆய்வாளர் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தார். அவருக்கு உதவியாக இருந்தேன்

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இரகசியத் தகவலாளி சம்பவ இடம் வரவில்லை. நானும், ஆய்வாளரும் ஒரே வாகனத்தில் சென்றோம். கைப்பற்றிய ஆயுதங்களின் நீளம், அகலம் தெரியாது. தப்பி ஓடிய எதிரி எந்த திசையை நோக்கி ஓடினார் என்றால் மேற்கு பக்கமாக ஓடினார். சம்பவ இடத்தை சுற்றி வீடுகள் உள்ளனவா என்றால் கொஞ்சம் தொலைவில் உள்ளது. அங்கு உள்ளவர்களை ஆய்வாளர் சாட்சியாக அழைக்கவில்லை. சம்பவ இடத்தில் தான் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். கைப்பற்றுதல் மகசரில் குற்றஎண் சட்டபிரிவுகள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் எந்த ஆயுதங்கள் வைத்திருக்க வில்லை என்றாலுமு, எதிரிகளிடமிருந்து சா.பொ.1 முதல் 3 கைப்பற்றபடவில்லை என்றாலும், வழக்கிற்கேற்றாற் போல் ஆய்வாளர் தயார் ஆவணங்களுக்கும், ஆயுதங்களுக்கும் ஏற்றாற் போல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்